வருடாந்த அறிக்கை 2019

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

கைத்தொழில் அமைச்சு

அறிமுகம்

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது (தே.தொ.மு.அ) 2006ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டது. நிறுவனத்தின் கட்டாயக் கடமையானது இலங்கையிலுள்ளள சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு (சிநதொமு) வசதிகளைச்செய்து கொடுப்பதாகும். அதிகாரசபையின் சட்டமானது, உள்ளூர் தொழில்முயற்சிகளுக்கு உட்கட்டமைப்பு வசதி, நிதி மற்றும் கொள்கை மட்டத்தில் உதவி ஒத்தாசைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கின்றது.

அதிகாரசபையானது, அதன் நேரடியான அமைச்சின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களுடன் பிராந்திய, அதேபோல தேசிய மட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது. தே.தொ.மு.அ.வானது, 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டுவரை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின்கீழ் பட்டியலிடப்பட்டிருந்தது. தே.தொ.மு.அ.வானது, 2010ஆம் ஆண்டில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின்கீழ் பட்டியலிடப்பட்டிருந்ததுடன், அதன் பின் இற்றைவரை இது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின்கீழ் முகாமைசெய்யப்படுகின்றது.

தே.தொ.மு.அ.வானது, சி.ந.தொமு. சமூகத்திற்காக, பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்றிடங்கள் மற்றும் நடவடிக்கைகளை, பிரதேச செயலக மட்டத்தில் தொடங்கியுள்ளது. இது பொது மற்றும் தனியார் வங்கிகள், வியாபாரக் கழகங்கள், அரசுசார்பற்ற நிறுவனங்கள் (உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள்) போன்ற பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்களாவன, நிதிசார் உதவிகள், பயிற்சியளித்தல், மதியுரைச்சேவை ஒத்தாசைகள் போன்ற அடிப்படைத் தேவைகளை சி.ந.தொ.மு. களின் அடிமட்டத்தில் வழங்குவதாகும். சி.ந.தொமு. களை பிரதேச செயலக மட்டத்தில் (பி.செ) ஒருங்கிணைப்பதற்காக பிராந்தியமட்ட அலுவலர்கள் பிரதேச செயலக (பி.செ) மட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



தொலைநோக்கு:

"நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளினை அபிவிருத்திசெய்து முன்னேற்றுதல், பாதுகாத்தல் மற்றும் கையாள்வதற்காக முன்னிலை வகிக்கும் முகமையாகவிருத்தல்."

பணிக்கூற்று

"ஏனைய தொழில்வல்லுநர்களுடன் ஒருங்கிணைந்து மற்றும் பங்காண்மை முறையில் சுறுசுறுப்பாகவும் வினைத்திறமையாகவும் உற்பத்தி நோக்குடன் நு.சி.ந.தொ.மு.களின் வளர்ச்சி, நிலைபேறான தன்மை ஆகியவற்றை நிச்சயிப்பதற்கு இலங்கையிலுள்ள நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளினை அபிவிருத்திசெய்தல், முன்னேற்றுதல்,பாதுகாத்தல் மற்றும் தரமுயர்த்தல்."

நோக்கங்கள்:

இலங்கைக்குள், சிறிய, நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திகளை ஊக்குவித்தல், தரமுயர்த்துதல் மற்றும் வசதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி, விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்.

தே.தொ.அ.அ.இனதுஇ சட்டத்தின் நோக்கங்களை அடையுமுகமாக உள்நாட்டுத் தொழில் முயற்சிகளினைச் சர்வதேசத்திற்கும், வெளிநாட்டுச் சந்தைக்கும் ஏற்றவிதமாக உட்புகுத்தும் நோக்கத்துடன், தொழில்முயற்சி வடிவமைப்பினை இலங்கைக்கு வெளியே தாபிப்பதையும், தொழிற்படுத்துவதனையும், ஊக்கமளித்துத் தூண்டுதல்.

கைத்தொழில் மற்றும் விவசாயத்திலான வியாபாரத்தினையும், அபிவிருத்தியினையும் கருத்தில்கொண்டு கொள்கை, திட்டம், உயர்வான ஊக்குவிப்பினைப் பொருத்தமான முறையில் வடிவமைப்பதுடன், வினைத்திறமையான ஒத்துழைப்பினையும், ஊக்குவிப்பினையும் வழங்கல்

தொழில்நுட்பத்திறனுடன் கூடிய மனித மூலதன அபிவிருத்தியில் மக்களின் அதிகாரமளித்தலை தொழில்முயற்சி அபிவிருத்தியினது ஒரு அவசியமான அங்கமாக்குதல்.

அபிவிருத்தித் தேவைகளைச் சந்திப்பதற்கு வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல்.

தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதிவசதியினை தொழில்முயற்சியாளர்களின் மூலமாகப்பெற ஏற்பாடுசெய்தல்.

உற்பத்தி, அபிவிருத்தி, தொழில்நுட்பவியல், தரமுயர்த்தல் மற்றும் வியாபாரக்குறி வர்த்தக மயமாக்கலுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை உயர்ந்த நிலைக்கு மாற்றுவதற்கு ஒரு தொழில்நுட்பவியல் அபிவிருத்தி நிதியினைத் தாபித்தல்.

பிராந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல்.

பணிப்பாளர் சபை:

1. திரு. டீ. கே. போகொல்லாகம - தலைவர் அல்லது பணிப்பாளர் நாயகம்

2. திரு. எஸ். பாலசுப்பிரமணியம் - முகாமைச்சபை உறுப்பினர்
மேலதிகச் செயலாளர், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு.

3. திருமதி. ஏச். ஏ. தாரக்க எறண்டி - முகாமைச்சபை உறுப்பினர்
உதவிப் பணிப்பாளர், பொதுநிதித் திணைக்களம் திறைசேரி.

4. திரு. மஞ்சுல சமரவிக்கிரம - முகாமைச்சபை உறுப்பினர்

5. திரு. எம்.எஸ்.எம். நதீர் - முகாமைச்சபை உறுப்பினர்

6. ஹிமாலி ஜினதாச அவர்கள் - முகாமைச்சபை உறுப்பினர்

7. திரு. எம்.எவ்.எஸ்.டபிளியூ.ஸ்ரெம்போ - முகாமைச்சபை உறுப்பினர்

8. திரு. செய்நுடீன் மரிக்கார் இல்காம் - முகாமைச்சபை உறுப்பினர்

9. திரு. நயினா மொஹமட் சறூர் - முகாமைச்சபை உறுப்பினர்

10. பஸ்னா அவர்கள் - சபைச் செயலாளர்.

04 மே 2023

கௌரவ. ரமேஷ் பதிரன
கைத்தொழில் அமைச்சர்,
கைத்தொழில் அமைச்சு.
இல.73.்.1,
காலி வீதி,
கொழும்பு 03.

கௌரவ ஐயா,

வருடாந்த அறிகை 2019

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்கக நிதிச்சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின்படி, நான் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

1. தேசிய தொழில்முயற்சி அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கை.

2. 31 டிசம்பர் 2019 அன்றுள்ளளபடியான ஐந்தொகை, 31 டிசம்பர் 2019 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செயலவுக் கணக்கு, 31 டிசம்பர் 2019 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்வுக் கூற்று.

3. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

லசந்த காரியபெரும

தலைமை இயக்குனர்.

வருடாந்த அறிக்கை 2019

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

நிகழ்ச்சித்திட்டம் 01 - சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர் வழிகாட்டிக் கைநூல் (வி.அ.சே. விபரக்கொத்தினைத் தயாரித்தல்)

நிகழ்ச்சித்திட்டம் 02 - பிராந்திய தொழில்முயற்சியாளர் விருதுவழங்கல் விழாக்கள்

நிகழ்ச்சித்திட்டம் 03 - மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சிக் குழுக்கள்

நிகழ்ச்சித்திட்டம் 04 – தொகுதி அல்லது துறைவாரியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம் 05 - வியாபார வர்த்தகச் சந்தைகள்

நிகழ்ச்சித்திட்டம் 06 - பிராந்திய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நிகழ்ச்சித்திட்டம் 07 - மாக்கடுற பரீட்சித்துப்பார்த்தல் தொழில்நுட்ப கைமாற்று நிலையத்தினை (ப.தொ.நு.கை.நி) தாபித்தல்

நிகழ்ச்சித்திட்டம் 08 - இருபால் தொழில்முயற்சியாளர்கள் (உபாதிதாரி வையவசாயக உதானய)

நிகழ்ச்சித்திட்டம் 09 - எப்படித் தெரிந்துகொள்வது என்பதில் சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களை மதிப்பீடு செய்தல்.

நிகழ்ச்சித்திட்டம் 10 - தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தியினூடாக இலங்கையின் இளைஞர்களை மேன்மையுறச்செய்தல்

நிகழ்ச்சித்திட்டம் 11 – ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்.

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2019.

நிகழ்ச்சித்திட்டம் 01 - வியாபார அபிவிருத்திச்சேவை (வி.அ.சே) விபரக்கொத்தினைத் தயாரித்தல்.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது (தே.தொ.மு.அ.) நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்காகவும், வியாபார அபிவிருத்திச்சேவை வழங்குநர்களுக்காகவும் வழிகாட்டிக் கைநூலினைத் வெளியிடத் தீர்மானித்துள்ளளது.

இது வியாபாரச் சேவை வழங்குநர்களது தகவல்களை உள்ளடக்குவதுடன் தொழில்முயற்சியாளர்கள் வெற்றிகரமான தொழில்முயற்சிகளினைத் தாபிக்க வழிகாட்டும் பயனுள்ள ஆவணமாகக் காணப்படும். (இதில் கிட்டத்தட்ட 200 பக்கங்கள் உள்ளன.)

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது, தே.தொ.மு.அ. அலுவலர்களிடமிருந்தும் பத்திரிகை விளம்பரங்கள் மூலமும் தகவல்களைச் சேகரித்துள்ளது. 2020ஆம் ஆண்டில் இதனைப் பிரசுரிக்க அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித்திட்டம் 02 - பிராந்திய தொழில்முயற்சியாளர் விருதுவழங்கல் விழாக்கள்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆழமான பங்களிப்பினைச்செய்த தொழில் முயற்சியாளர்களினை அடையாளம் காணல், ஊக்கமளித்தல் மற்றும் உந்துசக்தியளித்தல் ஆகிய நோக்கங்களுடன் தொழில்முயற்சியாளர் விருது வழங்கும் விழாக்களினைத் தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது நடாத்துகின்றது. தே.தொ.அ.அ.வானது மாவட்ட மன்றங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் எல்லா மாவட்டங்களிலுமாக, தேசிய மட்ட விருதுவழங்கல் விழா மற்றும் ஒன்பது விருதுவழங்கல் விழாக்களினை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.



விருதுவழங்கல் விழா - வடமத்திய மாகாணம்

தே.தொ.மு.அ. வானது மேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் தென் மாகாணம் ஆகியவற்றில் ஐந்து விருது வழங்கல் விழாக்களினை நடாத்தியது. தேசிய விருதுவழங்கும் விழாவினை 2020 ஆம் ஆண்டில் நடாத்த அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.



விருதுவழங்கல் விழா - மத்திய மாகாணம் மாகாணம்



விருதுவழங்கல் விழா – மேல்

நிகழ்ச்சித்திட்டம் 03 - மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சிக் குழுக்கள்

இலங்கையின் சனத்தொகையில் பெருமளவானோர் நுண், சிறிய, நடுத்தர அளவு தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன் வறுமைஒழிப்பிலும் ஈடுபட்டுள்ளனர். எனவே இந்தத்தொழில் முயற்சிகளுக்கு ஒரு தகுந்ததும், சக்திவாய்ந்ததுமான வியாபாரச் சூழலினை உருவாக்க வேண்டும். இதில் உள்ளூர் பொருளாதாரமானது இலகுவான மிகவும் முக்கியமான தொழிற்பாட்டினைக் கொண்டுள்ளது. ஏனெனில் அரசாங்கத்திற்கும் இயற்கை வளங்கள் மீதான மாற்றம்செய்தலானது உள்ளூர் மட்டத்தில் காணப்படுகின்றது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியானது (உ.பொ.அ) மரபுரீதியான அபிவிருத்தி நுட்பங்களின் மீது கவர்ச்சிகரமான மாற்றீடாகக் காணப்படுவதுடன் உ.பொ.அ. ஆனது, உள்ளூர் அமைப்பிற்கேற்றவாறு அதற்கேற்ற நுட்பங்களை ஏற்படுத்தக்கூடிய இயலுமையைக் கொண்டு முன்னேற்றகரமாக காணப்படுகின்றது. உ.பொ.அ. ஆனது அபிவிருத்தியில் ஒரு பங்குபற்றும் அணுகுமுறையாகும். பெருமளவான உள்ளூர் முதலீட்டாளர்கள் பிராந்திய மற்றும் தேசிய அரசாங்க மற்றும் சர்வதேச நிறுவனங்களில் உள்ளூர் பொருளாதாரச் சாத்தியத்திட்டத்திற்காக தொடர்ந்தேச்சையாகக் கருமமாற்றுகின்றனர். எனவே இப்படியான பங்குபற்றல் நோக்கத்தின் மூலம், உ.பொ.அ. வானது, உள்ளூர் தனியார் மற்றும் அரசாங்கத் துறை முதலீட்டாளர்கள், அதேபோல சமூக அரசியல் குழுக்களுக்கிடையில் ஊக்குவிப்பினையும், சந்தர்ப்பங்களையும், பங்காண்மையினையும் உருவாக்குகின்றது.

உள்ளூர் பொருளாதார அபிவிருத்திச் சம்பாஷனைகளை உருவாக்குவதற்கென தேசிய மற்றும் மாகாண அரசாங்க அதிகாரிகள், தனியார்துறை, அரசுசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் அரசாங்க சேவை வழங்குநர்கள் ஆகியோரை ஒன்றாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத் தொழில்முயற்சிக் குழுக்கள் (மா.தொ.மு.கு) ஒவ்வொரு மாவட்டத்திலும் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இவை மாவட்டச் செயலாளர்களினால் தலைமைவகிக்கப்படுகின்றது. பிராந்திய தொழில்முயற்சிக் குழுக்கள் (பி.தொ.மு.கு) பிரதேச செயலாளர்களினால் தலைமைவகிக்கப்படுவதுடன் மாவட்டத் தொழில் முயற்சிக் குழுக்களில் காணப்படுவது

போன்று வியாபாரத் துறையினரின் முக்கிய தொழில் முயற்சியாளர்கள், பிரதேச உள்ளூராட்சி மற்றும் தனியார்துறை அபிவிருத்திச் சேவை வழங்குநர்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் தொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச் சேவைகளை ஏற்பாடுசெய்யுமுகமாக பொருத்தமான பொறிமுறையினை அபிவிருத்திசெய்யுமுகமாக மாவட்ட தொழில்முயற்சிக் குழுக்கள் மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்களைத் தாபிப்பதற்கு தே.தொ.மு.அ. ஆனது திட்டமிட்டுள்ளது. 2019ஆம் ஆண்டுவரை, தே.தொ.மு.அ. ஆனது, 14 மாவட்ட தொழில்முயற்சிக்குழுக்களினையும் 222 பிராந்திய தொழில்முயற்சிக்குழுக்களினையும் தாபித்துள்ளது. இக்குழுக்களின் கூட்டங்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கொருமுறை நடைபெற்றது.



பிராந்திய தொழில் முயற்சிகள்குழு-திஹாகொடை.



பிராந்திய தொழில் முயற்சிகள்குழு - புத்தளம்.

நிகழ்ச்சித்திட்டம் 04 – தொகுதி அல்லது துறைவாரியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நுண், சிறிய, நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் (நு.சி.ந.தொ.மு.) பொருளாதார வளர்ச்சி மற்றும் பல்வேறு காரணிகளுக்காக இலங்கையில் ஒரு சாரதித்துவமாக சிபார்சு செய்யப்பட்டுள்ளது. ஏப்படியாயினும் இலங்கையிலுள்ள நு.சி.ந.தொ.மு. தனித்துவமான முறையில், பெறுமதிச் சங்கிலியுடன் சேர்ந்தாற்போல் சுதந்திரமாக வேலைசெய்யவேண்டியிருந்தது. நு.சி.ந.தொ.மு. தனித்தனியாக போட்டிச்சந்தை அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்குமுகமாக தொடர்ந்தேச்சையாக அதன் இயலுமையை அபிவிருத்திசெய்ய முடியாது. இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு தொகுதி அல்லது பிரிவுகளை அடிப்படையாகக்கொண்ட அணுகுமுறையானது நு.சி.ந.தொ.மு.களின் அபிவிருத்தியில் பயன்படுத்தப்படவேண்டும்.

தொகுதி அல்லது துறைகளை அடிப்படையாகக்கொண்ட அணுகுமுறையானது பல்வேறு நன்மைகளைக் கொண்டது. நு.சி.ந.தொ.மு.களானவை பயிற்சியளித்தலும் தொழில்நுட்பவியல் கண்டுபிடிப்பும், நிதிவசதிக்கான சுலபமான வழி மற்றும் பெரும்பாக நிறுவனரீதியான ஒத்துழைப்பு ஆகியவற்றினை அடையமுடியும். பல்வேறு இடங்களில் காணப்படும் தனித்தனியான தொழில்முயற்சிகள் அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதைக் காட்டிலும், மொத்தத் தொகுதியிலான தொழில் முயற்சிகளுக்கு குறைந்த கிரயத்தில் அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதற்கு அரசாங்க மற்றும் ஏனைய ஒத்துழைப்பு நிறுவனங்களுக்கு உதவியாக இருக்கமுடியும்.

2019ஆம் ஆண்டில் தே.தொ.மு.அ. ஆனது, வியாபாரத் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் ஈடுபாடு கொண்டுள்ளதுடன் சந்தை அபிவிருத்தி தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தித் தொழில்நுட்பவியல் கைமாற்று மற்றும் நிதிசார் உதவி போன்ற களங்களில் அவர்களின் இயலுமையை அபிவிருத்திசெய்ய தே.தொ.மு.அ. ஆனது விரும்புகின்றது. தே.தொ.மு.அ. ஆனது, 15 வியாபார பிரிவினை அடையாளம் கண்டுள்ளதுடன் 467 பயனாளிகளுக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளது.

வியாபாரத்துறை	மாவட்டம்	பயனாளிகளின் எண்ணிக்கை
ஜாவா பட்டிக்	பதுளை	25
தாவர வகை	கம்பஹா	21
தும்பு உற்பத்திகள்	களுத்துறை	16
சிறுவர் ஆடைகள்	அனுராதபுரம்	30
பை உற்பத்தி	அம்பாறை	20
பட்டிக் வடிவமைப்பு	மாத்தளை	34
ஆண்கள் தலைமயிர்வெட்டுதல்	குருணாகல்	30
அழகியல் கலை	புத்தளம்	50
தாவர வகை	மாத்தறை	48
அழகியல் கலை	காலி	74
சாம்பிராணிக்குச்சி	அம்பாந்தோட்டை	10
தேங்காய் சிரட்டை உற்பத்தி	இரத்தினபுரி	19
கைவினை	யாழ்ப்பாணம்	30
உணவு பதனிடல்	கிளிநொச்சி	25
தேங்காய்ச்சிரட்டையை அடிப்படை யாகக்கொண்ட உற்பத்தி	முல்லைத்தீவு	25
கைவினை	முல்லைத்தீவு	10
		467





தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் - மாத்தறை



உபகரணப் பங்கீடு – மாத்தறை

தொழில்நுட்பப்பயிற்சியளித்தல் - முல்லைத்தீவு



தும்பு உற்பத்திகள் - களுத்துறை



உபகரணப் பங்கீடு – கம்பஹா



சான்றிதழ் வழங்கல் - யாழ்ப்பாணம்

நிகழ்ச்சித்திட்டம் 05: வியாபார, வர்த்தகச் சந்தைகள்:

வியாபார, வர்த்தகச் சந்தைகளானவை பிராந்திய மட்டத்தில் சிறிய, நடுத்தர முயற்சிகள் துறையினை அபிவிருத்திசெய்யும் நோக்கத்திற்கென முன்மொழியப் பட்டவைகளாகும். சிறிய, நடுத்தர மற்றும் நுண்ணளவு தொழில்முயற்சியாளர்கள் நாட்டிலும், பிராந்திய ரீதியிலும் கிடைக்கக்கூடிய வியாபார அபிவிருத்திச் சேவைகள், அதேபோல விசேட ஏற்பாட்டாளர்களினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சியினையும்,



சேவைகளினையும் பற்றிக் கூடியவரையில் அறியாதவர்களாகக்

வியாபாரச் சந்தை – மாத்தறை

காணப்படுவதுடன், இதன்காரணமாக அவற்றிலிருந்து உச்ச சேவைகளைப் பெறமுடியாதவர்களாகவும் உள்ளனர் என்பதனை தே.தொ.அ.அ.வானது அடையாளம் கண்டுள்ளது. தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார சேவை ஏற்பாட்டாளர்களுக்குமிடையிலான இந்த இடைவெளியினை நிரப்புவதற்கு ஒரு பலமான தொடர்பினையும் பரஸ்பரம் உருவாக்க வேண்டும். வியாபாரச்சேவை வர்த்தக சந்தைகளானவை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்கிடையிலும், வி.அ.சே. ஏற்பாட்டாளர்களுக்குமிடையிலும் ஒரு பாலமாக அமைவதுடன், வி.அ.சே. ஏற்பாட்டாளர்களிடமிருந்து உச்ச சேவைகளை பயன்படுத்துவதற்கு இவை உத்தேச தொழில்முயற்சியாளர்களின் தொழில்முயற்சியாண்மை இயலுமையை உயர்த்துமென்பதாகும். அதேவேளையில் இது அவர்களின் உற்பத்தியினை அறிமுகம் செய்யவும், சந்தை இணைப்பினை தாபிக்கவும் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

2019 ஆம் ஆண்டில், தே.தொ.அ.அ. வானது எல்லா மாகாணங்களிலும் இச் சந்தையினை நடாத்தியது. தே.தொ.அ.அ. வானது, 17 வியாபாரச் சந்தைகளையும், தேசிய வியாபாரச் சந்தைகளையும் (160 விற்பனைச்சாலைகள்) நடாத்தியது.



வியாபாரச் சந்தை – கண்டி



வியாபாரச் சந்தை – குருணாகல்





தேசிய வியாபாரச் சந்தை

பிராந்திய வியாபாரச் சந்தைகளின் முக்கியத்துவம்.

1. நுண், சிறிய அளவு தொழில்முயற்சியாளர்கள் பிராந்திய மட்டத்தில் தங்களின் உற்பத்திகளை அறிமுகம்செய்யமுடியுமென்பதுடன் சந்தைத் தொடர்பாடலையும் தாபிக்கமுடியும். தொடக்க நிலையில் அவர்கள் தேசிய மட்ட வியாபாரச் சந்தைகளுடன் தொடர்பை ஏற்படுத்துவது கடினமாகும். இதற்கு மேலதிகமாக வித்தியாசமான வியாபாரப் பிரிவினருடன் ஈடுபாடு கொண்டுள்ள நுண், சிறியஅளவு தொழில் முயற்சியாளர்கள் தங்களின் உற்பத்திகளை தேசிய மட்ட வியாபாரச் சந்தைகளில் அறிமுகஞ்செய்யமுடியும். (தாவரவகை, உணவு பதனிடல், கைவினை, ஆடைகள் முதலியன.) தங்களின் வியாபாரத்தினை விரிவாக்கிய பின்பு அவர்கள் தேசிய மட்ட வியாபாரச் சந்தைகளினைக் கவனிக்க முடியும்.

2. தங்களின் உற்பத்திகள் போட்டிச்சந்தையுடையனவா, இல்லையா என்பதை அடையாளம் காண்பதற்கு சந்தை ஆராய்ச்சி செய்வதற்கான சந்தர்ப்பம் மற்றும், புதிய உற்பத்திகள் பதனிடுதல், சிந்தனைகள் நுட்பங்களுக்கான பரீட்சித்துப்பார்க்கும் இடமாக தொழில்முயற்சியாளர்கள், பாவிக்கும் இடங்களையும் அறிவதற்கு.

3. தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்குமான பழகும் சுற்றாடலை உருவாக்குதல்.

4. புதிய அல்லது தற்போதுள்ள வாடிக்கையாளார்களின் முன்னிலையில் தங்களின் பொருட்களினை முன்வைக்கச் சந்தர்ப்பம் அளித்தல்.
5. வலைப்பின்னல் சந்தர்ப்பங்களை ஏற்பாடுசெய்தல்.

6. தங்களின் வழங்குநர்களுடனும் ஏனைய வியாபாரங்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வசதிப்படுத்தவும் அதேபோல சந்தர்ப்பம் ஏற்படும்போது இன்னொரு மட்டத்திற்கு செயல்திட்டங்களை கொண்டுசெல்லவும் வியாபாரச்சந்தையானது அனுமதியளிக்கின்றது.

மாவட்டம்	சந்தைகளின் எண்ணிக்கை	விற்பனைச்சாலைகளின் எண்ணிக்கை
மொனறாகலை	01	25
களுத்துறை	01	30
கம்பஹா	01	43

அனுராதபுரம்	01	40
திருகோணமலை	03	80
அம்பாறை	01	20
புத்தளம்	02	90
குருணாகல்	01	150
கண்டி, நுவரெலியா, மாத்தளை	01	60
மாத்தறை	01	80
காலி	01	70
அம்பாந்தோட்டை	01	45
கேகாலை	01	10
வவுனியா	01	21
மொத்தம்	**17**	**764**

நிகழ்ச்சித்திட்டம் 06 - பிராந்திய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் (நு.சி.ந.தொ.மு) இலங்கையின் வளர்ச்சியினை முன்னேற்றுவதிலும் சமூக அபிவிருத்தியிலும் முக்கிய நுட்பத்துறையினராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். பலவருடங்களாக சி.ந.தொ.மு.களானவை தொழில்வாய்ப்பளிப்பதில் பாரிய வளவாளர்களாகவும், வருமானம் உருவாக்குபவர்களாகவும் பரந்த சிபார்சினைப் பெற்றுள்ளனர். நு.சி.ந.தொ.மு.களின் விவசாயம், சுரங்கத்தொழில் உற்பத்திசெய்தல், நிருமாணிப்பு மற்றும் சேவைத்துறைத் தொழிற்சாலைகள் போன்றன அகன்ற பொருளாதாரப் பரப்பளவினை உள்ளடக்குகின்றன.

நு.சி.ந.தொ.மு.களின் வளர்ச்சியும் விரிவும் அவர்களால் தொழிற்படுத்தப்படும் உற்பத்தி மற்றும் காரணிச்சந்தை மற்றும் ஒழுங்குபடுத்தல் முறைமைகளிலிருந்தும் உண்டாகின்ற பிரச்சினைகளில் கட்டாயமாக உட்படுத்தப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகள் அகன்ற பகுதிகளான நிதிக்கான வழி, பௌதீக உட்கட்டமைப்பு, தொழில்நுட்பவியல் மட்டம், ஒழுங்குபடுத்தல் சட்டகவேலை, தகவல் மற்றும் ஆலோசனைகளுக்கான வழி சந்தைகளுக்கான வழி வியாபார அபிவிருத்திச்சேவைகள் கைத்தொழில்உறவுகள் மற்றும் தொழில் சட்டவாக்கம், புலமைச்சொத்து உரிமை, தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ

திறன் தொடர்பாடல் வழிமுறைகள் மற்றும் சுற்றாடல் விளைவுகளுக்குள் விழுகின்றன.

தொழில்முயற்சியாண்மையில் சந்தைப்படுத்தல் தொழில்நுட்பம் மற்றும் நிதிசார் முகாமைத்துவம் போன்ற விளைவுகளை அவர்கள் சந்திப்பதை தே.தொ.அ.அ. வானது, கண்டுள்ளது. மேலும் அவர்கள் தங்களின் வியாபாரங்களைத் தொடங்கவும் அவற்றை விரிவாக்கவும் நிதிசார் தடைகளுக்கு முகங்கொடுத்துவந்துள்ளனர். தே.தொ.அ.அ. வின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிராந்திய மட்டத்தில் தொழில்செய்வதனால் மேற்படி விளைவுகளுக்கு தீர்வுகள் தேவைப்படும் தொழில்முயற்சியாளர்களை அடையாளம் கண்டுள்ளனர்.

எனவே, தே.தொ.அ.அ. வானது, குறுகியகால இயலுமை அபிவிருத்திப் பயிற்சியளித்தல் நிதிசார் உதவி, சந்தைவாய்ப்புகள், மற்றும் ஏனைய அபிவிருத்திச் சேவைகள் மற்றும் பின்தொடரும் சேவைகளை எல்லா மாவட்டங்களிலும் பிராந்திய மட்டத்தில் இந்த தொழில்முயற்சியாளர்களுக்காக அமுலாக்குகின்றது. தே.தொ.அ.அ. வானது, பிரதேச, மாவட்ட செயலாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் செயற்றிட்ட முன்மொழிவுகளை அமுலாக்குவதற்கு வேண்டிய செயற்றிட்ட முன்மொழிவுகளை தனது அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் நிதிசார் ஒத்தாசைகளையும் வழங்குகின்றது.



தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் - பூஜாப்பிட்டிய



தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் - குருணாகல்



தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் - அனுராதபுரம்



தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் -

களுத்துறை

2019ஆம் ஆண்டில் தே.தொ.மு.அ.வானது புதிய மற்றும் தற்போதுள்ள 14,521 தொழில்முயற்சியாளர்களுக்காக 389 பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

மாவட்டம்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை	பயிற்சியளிக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை
மொனறாகலை	15	397
பதுளை	12	726
கொழும்பு	03	100
கம்பஹா	13	650
களுத்துறை	14	725
அனுராதபுரம்	20	1025
பொல்லநறுவை	01	32
அம்பாறை	26	685
மட்டக்களப்பு	20	521
திருகோணமலை	06	191
குருணாகல்	58	1719
புத்தளம்	13	1769
மாத்தளை	09	828
கண்டி	17	524
நுவரெலியா	01	56
மாத்தறை	45	435
காலி	25	435
அம்பாந்தோட்டை	08	535
கேகாலை	17	612
யாழ்ப்பாணம்	24	603
கிளிநொச்சி	07	145

வவுனியா	18	55
மன்னார்	01	72
முல்லைத்தீவு	08	216
இரத்தினபுரி	08	1200
மொத்தம்	**389**	**14551**

அத்துடன் தே.தொ.மு.அ.அ.வானது கீழேகாட்டப்பட்டவாறு 964 புதிய வியாபாரங்களைத் தாபித்துள்ளதுடன், 1483 வியாபாரங்களையும் விரிவுபடுத்தியுள்ளது.

மாவட்டம்	தாபிக்கப்பட்ட புதிய வியாபாரங்களின் எண்ணிக்கை	விரிவாக்கப்பட்ட வியாபாரங்களின் எண்ணிக்கை
மொனறாகலை	47	28
பதுளை	60	182
கொழும்பு	15	11
கம்பஹா	68	85
களுத்துறை	92	33
அனுராதபுரம்	07	37
மட்டக்களப்பு	35	17
அம்பாறை	26	35
திருகோணமலை	05	0
மாத்தறை	30	15
காலி	08	09
அம்பாந்தோட்டை	60	34
குருணாகல்	100	313
புத்தளம்	86	267
மாத்தளை	103	227
கண்டி	60	104
நுவரெலியா	22	28
கேகாலை	16	13
இரத்தினபுரி	17	18
யாழ்ப்பாணம்	35	0

கிளிநொச்சி	13	0
வவுனியா	57	27
மொத்தம்	**964**	**1483**

நிகழ்ச்சித்திட்டம் 07 - மாக்கடுற பரீட்சித்துப்பார்த்தல் தொழில்நுட்பக் கைமாற்று நிலையத்தினைத் தாபித்தல்.

பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் கைமாற்று நிலையமானது (ப.தொ.நு.கை.நி) புதிதாக ஒரு உற்பத்தி அல்லது சேவை வரிசைகளில் ஈடுபடும்போது ஏற்படும் அபாயத்தைக் குறைக்கும் ஒரு நிலையமாகக் காணப்படுவதுடன் முதலிடப்படவுள்ள தொடக்க மூலதனத்தின் அளவை உயர்தொழில்தரப் பின்னணியிலிருந்து குறைக்கக்கூடியதாக உள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமானது, அப்பகுதியிலுள்ள நுண் மற்றும் சிறிய கைத்தொழில் சாலைகளுக்கு வசதிசெய்து கொடுப்பதும் பல்கலைக்கழகங்களிலிருந்து சித்தியடைந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு அவர்கள் தங்களின் சுய திடகாத்திரத்திற்கு வளரும்வரை வியாபாரத்தினைத் தொடங்குவதற்கு உதவிசெய்வதும் ஆகும்.

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தினதும், சூழவுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கப்பெறும், தேவைப்படும் புதுமையான இயந்நிரங்கள் மற்றும் உபகரணங்களின் தேவைகளுடன் தொழிலைத் தொடங்குவதற்கு பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் கைமாற்று நிலையமானது வசதிசெய்து கொடுக்கின்றது.

தாபிப்பு முகாமை மற்றும் தொழிற்பாட்டிற்கென தே.தொ.அ.அ. வானது, வயம்ப பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றிற்கு எட்டியுள்ளது. தொழில்நுட்பவியல் கைமாற்று நிலையமானது, கம்பனிகள் பதிவாளரிடத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியாகவும் பணிப்பாளர் சபை ஒன்றினால் முகாமைசெய்யப்படும் ஒரு கம்பனியாக எதிர்காலத்தில் காணப்படும்.

இன்றுவரை தே.தொ.அ.அ.வானது கட்டிட மற்றும் இயந்திர நிறுவுதலைப் பூர்த்தி செய்துள்ளதுடன் இது 2017 செப்ரெம்பரில் திறந்துவைக்கப்பட்டது. தற்போது தே.தொ.அ.அ. வானது தொழில்முயற்சியாளர்களுக்கும், பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கும் சேவைகளை வழங்குகின்றது.

நிகழ்ச்சித்திட்டம் 08 - இருபால் தொழில்முயற்சியாளர் (உபாதிதாரி வையவசாயக உதானய).

நு.சி.ந.தொ.மு.களானவை, நாட்டில் காணப்படும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் தீர்க்கமான வகிபாகத்தைக்கொண்டிருந்ததுடன், வறுமை ஒழிப்பு மற்றும் வேலையில்லாப்

பிரச்சினையையும் தீர்ப்பதனையும் அடையாளம் கண்டுள்ளது. புள்ளிவிபரங்களின்படி 2013ஆம் ஆண்டில் சி.ந.தொ.மு.களானவை, வேலைவாய்ப்பினை வழங்குவதிலும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் (மொ.உ.உ.) பங்களிப்பு வழங்குவதிலும் கடினமான ஒரு வகிபாகத்தினை கொண்டிருந்ததுடன், நு.சி.ந.தொ.மு.களின் பங்களிப்பானது நாட்டின் மொ.உ.உ. இன் 40 சதவீதம் என்பதுடன் 2014ஆம் ஆண்டில் இது மொ.உ.உ. இன் 52 சதவீதமமாகும்.

இந்தக் காரணிகளை விளங்கிக்கொண்டு தே.தொ.மு.அ.வானது பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் இயலுமையை முன்னேற்றுவதன் மூலம் வெற்றிகரமாக தொழில்முயற்சியாளர்களை அபிவிருத்திசெய்வதற்கும், அவர்களை வியாபார உலகில் சந்தர்ப்பங்களை நோக்கியதாக வழிநடாத்திச் செல்வதற்குமாக அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு விசேடத்துவம் மிக்க நிகழ்ச்சித்திட்டத்தினை எடுத்துச்சென்றது. இந்த தொடக்க நிலையில் மென்மேலும் முன்னேறிச் செல்லக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு தொழில்முயற்சியாளர் கல்வி மற்றும் மென்பொருள் திறமையின் அபிவிருத்தியையும் நிலைநிறுத்த இன்னும் பலமான திறமையானது தேவைப்படுகின்றது. தே.தொ.மு.அ.வினது பார்வையில் காணப்படுவது என்னவென்றால், பல்கலைக்கழகங்களின் தற்போதைய எடுத்துச்செல்லும் வழிகாட்டிக் கூறானது தொழில்முயற்சியாளர் பட்டதாரிகளை உருவாக்கத் தீர்க்கமான வகிபாகத்தைக் கொண்டிருக்கு மென்பதுடன், தொழில்முயற்சியாளர் பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம் ஏனையோருக்கும் முன்னெடுத்துச்செல்லும் சந்தர்ப்பங்களை உருவாக்கக்கூடிய ஒரு கூறாக இது முன்வரும்.

எனவே சமூக அழுத்தங்களின் காரணமாக (தொழில் முன்னேற்றத்தில் ஈடுபடுவதற்கு விருப்புரிமை) அத்துடன் ஒரு தொழில்முயற்சியாளராக ஆகுவதனைப் பெறுபேறாகக் கொண்டுவரக்கூடிய நன்மைகள் பற்றிய தெரிந்துகொள்ளலின் குறைபாடு காரணமாக பட்டதாரிகள் தொழில் முன்னே ற்றத்தில் ஈடுபடுவதற்கு விருப்புரிமையைக் கொண்டவர்கள் ஆவார்கள். இதற்குமேல் தொழில்முயற்சியாளர்களுக்கான சந்தர்ப்பம் பற்றிய விழிப்புணர்வின்மை, வியாபார பொறுப்பெடுத்தலில் போதிய அறிவின்மை, தொடக்க முதலீடு நிறுவனங்களில் அபாய ஈடுபாடு ஆகியன பட்டதாரிகளை வியாபாரத்தில் ஈடுபடத் தூண்டாமைக்கான காரணமாகும். மேலே கூறப்பட்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு, தே.தொ.மு.அ.வானது ஒரு பட்டதாரி தொழில்முயற்சியாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தினை வடிவமைத்து அறிமுகம் செய்துள்ளது.





‘யூவீயூ’ கொடையளித்தல் விழா



விழிப்புணர்வுநிகழ்ச்சித்திட்டம்-மாவனெல்ல

நிகழ்ச்சித்திட்டம் 10 - தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தியினூடாக இலங்கையின் இளைஞர்களை மேன்மையுறச்செய்தல்

தே.தொ.மு.அ.வானது தொழில்முறைப் பயிற்சியாளர்களுக்கு தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்பாடுசெய்கின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயற்சியளித்தல் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் அமுலாக்கப்படுகின்றதுடன், மேல் மாகாணத்திலிருந்து தொடங்கப்படுகின்றது. 2019ஆம் ஆண்டில்
தே.தொ.மு.அ.வானது 100 தொழில்முறைப்பயிற்சியாளர்களுக்கு தொழில்முயற்சியாண்மைப் பயிற்சியளித்தலை ஏற்பாடுசெய்ததுடன், அழகுக்கலையில் ஈடுபட்டுள்ள 28 இளைஞர்களுக்கு இயந்திரங்களும், உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சித்திட்டம் 11 – ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்.

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளித்தல் நிகழ்ச்சித்திட்டம்

யாழ்ப்பாணத்தில் உணவுத்தொகுதியில் ஈடுபட்டுள்ள பெண்கள் தொழில்முயற்சியாளர்களுக்கு (60 பயனாளிகள்) வியாபாரத் திட்டமிடல் பயிற்சியளித்தலும், திருகோணமலை மாவட்டத்தில் (60 பயனாளிகள்) பொதியிடல் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டமும்.

ஐ.என்.சீ.ஈ.ஈ. சீமெந்து:- கண்டி, அம்பாந்தோட்டை, மொனறாகலை, காலி, இரத்தினபுரி, பதுளை, அனுராதபுரம், மாத்தறை, புத்தளம் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள மேசன் தொழில்முயற்சியாளர்களுக்கான (2812), பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் (என்.வி.கியூ.எல். 111 தகைமைபெற்றோர் 112)

சமூக முயற்சிகள்:-

பொல்லனறுவை அபிவிருத்தி நிகழ்சித்திட்டத்திற்குத் தெரிவுசெய்வதற்காக 30 பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். 40 பேருக்கு 'ரீ.ஓ.ரீ.' நிகழ்ச்சித்திட்டம். (சமூக தொழில்முயற்சி அபிவிருத்தி) வியாபாரச் சந்தையில் பங்குபற்றுவதற்கு (தொழில்முயற்சியாளர்கள்) சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

எச்.ஐ.மானிடவியல் மற்றும் உள்ளடக்கல் நிகழ்ச்சித்திட்டம்:-

வெலிமடை, ஹாலி-எல, பசற, லுணுகல பகுதிகளிலுள்ள பாற்பண்ணை மரக்கறி மற்றும் பழங்கள் துறைகளிலான பெறுமதிச்சங்கிலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

மோனறாகலை, பிபிலை, வெள்ளவாய மற்றும் படல்கும்புற பகுதிகளிலுள்ள விசேட பெண்கள் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

தே.தொ.மு.அ.அ. அலுவலர்களுக்கான ஒருநாள் வியாபார ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்.

பி.தொ.மு. குழுக்களுக்கான (மாத்தளை, பதுளை, மொனறாகலை, நுவரெலியா மாவட்டங்கள்) ஒத்துழைப்பு.

நீங்கள் வழிகாட்டுங்கள்:-

தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தியின் மீதான தே.தொ.மு.அ.அ. அலுவலர்களுக்கான (26 பேருக்கு) 'ரீ.ஓ.ரீ.' பயிற்சியளித்தல். உணவு மற்றும் புடவைத்தொழில் முயற்சியாளர்களுக்கான சந்தைத் தொடர்பு.



ஐ.நா.அ.நி.தி:- மண்டிறிகிரிய, லங்காபுர, வலப்பனை மற்றும் மஹாவலிப் பகுதிகளில் (80 தொழில்முயற்சியாளர்கள்) தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

பத்தரமுல்லையிலுள்ள நல்ல வியாபாரச் சந்தைக்கு தொழில்முயற்சியாளர்களை அறிமுகம் செய்தல்மூலம், புடவை மற்றும் உணவுகளுக்கான சந்தைத் தொடர்புகளை விரிவுபடுத்தல்.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக்கூற்று	**குறிப்பு**	**2019** **ரூ.**	**2018** **ரூ.**
நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மானியங்களின் பயன்பாடு			
ஆண்டிற்குரிய மானியம்	**18**	37,057,416	28,557,098
நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவுகள்	**9**	37,057,416	28,557,098
நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான ஆண்டுக்கான மிகை.̛. (குறை)		-	-
செயற்பாடுகள்			
பொது திறைசேரியிலிருந்து மீண்டெழும் மானியங்கள்		25,260,257	24,617,557
திரட்டப்பட்ட அரசாங்க மானியங்கள்	**14**	2,545,873	2,505,842
பிற வருமானங்கள்	**7**	825,256	5,121,726
மொத்த வருமானம்		**28,631,386**	**33,245,125**
நிர்வாகச் செலவுகள்	**8**	29,499,033	26,600,152
பிற கருத்திட்ட செலவுகள்	**9**	-	2,999,340
மொத்த செலவுகள்		**29,499,033**	**29,599,492**

ஆண்டுக்கான தேறிய மிகை.்.(குறை)	**(867,647)**	**3,645,633**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று	**குறிப்பு**	**2019** **ரூ.**	**2018** **ரூ.**
சொத்துக்கள்			
நிலையான சொத்துக்கள்			
காணி, கட்டிடம் மற்றும் உபகரணம்	**10**	5,752,892	7,476,170
நடைமுறை சொத்துக்கள்			
பெறுவனவுகள்	**11**	1,754,416	374,591
வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்	**12**	89,970,926	103,179,402
முற்கொடுப்பனவுச் செலவுகள்	**13**	98,604	93,716
பண்டிகைகான முற்பணங்கள்		24,000	9,000
இடர் கடன்		2,232,034	2,095,588
காசு மற்றும் காசுக்கு சமனானவை		351,521	2,016,990
டீ.நுஒிசநளள டுவன	**22**	600	46,450,000
மொத்த நடைமுறை சொத்துக்கள்		**94,431,500**	**154,219,287**
சேமிப்புக் கணக்குகள்- பணிக்கொடை		583,670	561,941
மொத்த பிற நடைமுறை சொத்துக்கள்		**583,670**	**561,941**
மொத்த சொத்துக்கள்		**100,768,062**	**162,257,401**
உரிமையாண்மையும் பொறுப்புகளும்			
திரட்டப்பட்ட மிகைகள்		2,405,900	49,798,341
மொத்த உரிமையாண்மை		**2,405,900**	**49,798,341**
நடைமுறை அல்லா பொறுப்புக்கள்			
அரசாங்க மானியம்	**14**	2,899,092	4,867,072
ஓய்வூதிய நன்மை பொறுப்புகள்	**15**	1,692,735	1,051,929
மொத்த நடைமுறை அல்லா பொறுப்புக்கள்		**4,591,827**	**5,919,000**
நடைமுறை பொறுப்புக்கள்			
நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மானியம்	**16**	89,676,008	104,067,179
அட்டுறு செலவுகள்	**17**	3,830,470	1,745,747
அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்கள்	**18**	76,630	539,906
ஆ.ஃ.ளு ருனூீ	**18**	187,228	187,228
மொத்த நடைமுறை பொறுப்புக்கள்		**93,770,336**	**106,540,060**
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புகளும்		**100,768,062**	**162,257,401**

05 தொடக்கம் 19 வரையான குறிப்புகளடங்கிய பக்கங்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதாக நான் உறுதியளிக்கின்றேன்.

….....

கணக்காளர்

கையொப்பமிட்டது

….....

திரு. சுனில் ஜயரத்ன

தவிசாளர்.˙. பணிப்பாளர் நாயகம்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்து வழங்குவதற்கான முழு பொறுப்பும் பணிப்பாளர் சபையினரையே சாரும்.

பணிப்பாளர் சபையின் சார்பாக அனுமதியளிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

….....

பணிப்பாளர்

திரு. அசங்க விஜேசுந்தர

….....

பணிப்பாளர்

திரு. ஹேமசிறி பெரேரா

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று

	உரிமையாண்மை மிகைகள்	மொத்தம்
	ரூ.	ரூ.
2018 ஜனவரி 01 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**26,303,316**	**26,303,316**
வருடத்திற்கான தேறிய மிகை	3,645,633	3,645,633
2017 ஆம் ஆண்டிற்கான சீர் செய்யப்பட்ட முற்பண கொடுப்பனவுகள்	19,638,313	19,638,313
சீர் செய்யப்பட்ட முற்பண காப்புறுதி மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான திவியட உதான நிகழ்ச்சித்திட்டம்	1,017,647	1,017,647
2017 ஆம் ஆண்டிற்கான கணினி மற்றும் துணைக்கருவிகளுக்கான சீர் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு, கணக்காய்வுக் கட்டணங்கள் மற்றும் எழுதுகருவிகள்	(806,569)	(806,569)
2018 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**49,798,341**	**49,798,341**
ஆண்டிற்கான தேறிய மிகை	(867,647)	(867,647)
சீர் செய்யப்பட்ட முற்பண கொடுப்பனவுகள்	(43,997)	(43,997)
சீர் செய்யப்பட்ட டீ. நுஜிசநளள டுவன இன் முதலீடு	(46,450,000)	(46,450,000)
2018 ஆம் ஆண்டிற்கான சீர் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு	(30,797)	(30,797)
2019 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**2,405,900**	**2,405,900**

டீஏசீ.ஃபி.ஃஎன்ஈடிஏ.ஃஎப்எஸ்.ஃ 2019 2023 மே 04 ஆம் திகதி

தலைவர்,

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான காசு பாய்ச்சற் கூற்றும் காசு பாய்ச்சல்களுக்குரிய குறிப்புகளும், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிக்கட்டளைச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையானது எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களில் விளைவுகளை தவிர்த்து, அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான செயற்படு மூலதனம் மற்றும் காசுப் பாய்ச்சல்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மைத்தன்மையினையும் நியாயத்தன்மையினையும் பிரதிப்பளிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இ.க.நி. 16- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

(அ). நியமங்களின் 51 ஆவது பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படுத்தக்கூடிய ஆயட்காலத்தினைக் குறைத்து எல்லா நிதி ஆண்டுகளின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்பு நிலைமையொன்றில் மேலே மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படின் அம்மாற்றங்கள் இ.க.நி. 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் வித்தியாசமாகக் கருதி கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு எழுதப்பட்ட இறுதி மீதி ரூ. 5,752, 892 ஆவதுடன் மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், தளபாடம் மற்றும் பொருத்துக்கள், கணினியும் துணைக்கருவிகளும் மற்றும் இயந்திர உபகரணங்களின் எஞ்சிய பெறுமதியும் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலமும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ). நியமங்களின் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு ஆனாலும் தற்போது வரையிலும் பயன்படுத்தப்பட்டுவரும் ஆதன, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் தேறிய மீதியானது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு ஆனாலும் தற்போது வரையிலும் பயன்படுத்தப்பட்டு வரும் 03 மோட்டார் வாகனங்கள், 28 அலுவலக உபகரணங்கள், 30 தளபாடம் மற்றும் பொருத்துக்கள் மற்றும் 38 கணினி மற்றும் துணைக்கருவிகளின் தேறிய மீதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.2. கணக்கீட்டின் குறைப்பாடுகள்

(அ). மீளாய்வாண்டில் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்தக்கூடிய மானியங்களின் மொத்த தொகை ரூ. 40,678,286 ஆவதுடன், அவை நிதிக் கூற்றுக்களில் ரூ. 37, 057,416 ஆக காட்டப்பட்டிருந்தமையால் ரூ. 3,620,870 ஆல் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினது ஏற்பாடுகளினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முழெற ாழற நிகழ்ச்சித்திட்த்தின் கீழ் மீளாய்வாண்டு நிதியில் ஏற்பட்ட செலவுகள் ரூ. 3,456,847 ஆனது, ஆண்டுக்கான செலவுகளாக கருதப்பட்டு ரூ. 2,130,773 எனவும் அமைச்சிலிருந்து கிடைக்கப்பெறுவது தொடர்பாக உறுதியளிக்கப்படாத ரூ. 1,326, 074 ஆனது அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய நிதியாகவும் கருதப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், மீளாய்வாண்டில் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவுகள் ரூ. 1,326,074 ஆல் குறைத்தும் கிடைக்கப்பெற வேண்டிய மீதியில் அதே தொகையானது அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(இ). மீளாய்வாண்டினுள் அதிகாரசபைக்கு மானியமாக கிடைக்கப்பெற்ற ரூ. 275, 500 பெறுமதியான மோட்டார் சைக்கிளொன்று நிதிக்கூற்றுக்களில் பிற வருமானமாக கருதப்பட்டதனால் ஆண்டின் வழு மற்றும் மானிய கணக்கின் மீதியில் அத் தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (இ.க.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. இக் கணக்கீட்டு நியமத்தின் கீழ் எனது பொறுப்பானது, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானது மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ச்சியாக செயற்படும் ஆற்றல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்புச் செய்வற்கு முற்படுதல் அல்லது வேறு உபாயமார்க்கங்கள் இல்லாத போது செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தவிர்த்து தொடர்ச்சியாக செயற்படும் என்ற அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் அதிகாரசபையானது தொடர்ச்சியாக செயற்படுவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதலானவை முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறைகள் தொடர்பான பொறுப்புக்கள், ஆளுகைத் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கட்டளைச்சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியதும் சரியான வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து அப்பாற்பட்டவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக அதிகாரசபையானது தொடர்ச்சியாக செயற்படுவது தொடர்பான பொருண்மையான நிச்சயமற்றத் தன்மை காணப்படுகிறதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சிகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனமானது தொடர்ச்சியாக செயற்படும் அடிப்படையினை பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடொன்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொருண்மையான நிச்சயமற்றத்தன்மை காணப்படுவதாக நான் தீர்மானித்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனிக்கப்படவேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லையாயின் எனது அபிப்பிராயமானது மாற்றியமைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான செயற்பாடுகளை முடிவுறுத்த முடியும்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் அடையாளங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் வேறு விடயங்கள் தொடர்பாக ஆளுகைத் தரப்பினர்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

02. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1.எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களில் விளைவுகள் தவிர்ந்த, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, கணக்காய்விற்கு தேவையான அனைத்து விடயங்கள் மற்றும் தெளிவுப்படுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது அவதானிப்புகளின் பிரகாரம் முறையான நிதிக் கூற்றுக்கள் அதிகாரசபையினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (யை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒத்திருந்தன.

2.1.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (ளை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2. பின்பற்றப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களை கட்டுப்படுத்துவதனூடாக, கீழே குறிப்பிடப்பட்ட வெளிப்பாடுகள் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிர்வாக சபையின் சில உறுப்பினர்களுக்கு அதிகாரசபையுடன் தொடர்புடைய சில ஒப்பந்தங்கள் தொடர்பாக நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ சாதாரண வியாபார போக்கினைத் தாண்டிய ஒரு தொடர்பு உள்ளது.

2.2.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளை தவிர சில தொடர்புடைய எழுத்து மூலமான நீதிக்கு அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்காது செயற்பட்டுள்ளது.

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்	
(i) 13 (ஆ)	வெளிநாட்டுச் சந்தையில் வெற்றிபெறக் கூடிய உள்நாட்டு தொழில் முயற்சிகளை தேசியமயமாக்குவதற்கான நோக்கத்துடன் தொழில் முயற்சியாளர்களை இலங்கையில் உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதலை தூண்டுவதற்கான ஊக்கப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii)	13 (எ)	தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேற்றன் உரிமையில் வணிகம் செய்வதற்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான தொழிநுட்ப அபிவிருத்தி நிதியமொன்றினை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி

(i)	நிதி ஒழுங்குவிதி 103 மற்றும் 104	அதிகாரசபையில் காணப்பட்ட ரூ.203,890 பெறுமதியான இரண்டு மடிக்கணினிகள் (லெட்டொப்) மற்றும் ரூ. 61,900 பெறுமதியான இரண்டு டெப் கணினிகள் காணாமல் போயுள்ளமை தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ii)	நிதி ஒழுங்குவிதி 395 (இ)	வங்கிக் கணக்கு காணப்படும் எல்லா நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியிலும் காணப்படும் கொடுக்கல் வாங்கல் நிலைமைகள் தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக வங்கி இணக்கக் கூற்றானது தயாரிக்கப்பட வேண்டும் எனினும் அதிகாரசபையினால் 2019 ஆம் ஆண்டிற்குரிய வங்கி இணக்கக்கூற்றானது தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(iii)	நிதி ஒழுங்குவிதி 507 மற்றும் 756 பொருட்கள் தொடர்பான	டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் மற்றும் நிலையான சொத்துக்கள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும் 2017,2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பான கணிப்பாய்வானது இந்த அறிக்கையின் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(iv)	2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டம் மற்றும் 2008 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதிய 1530.̈.13 இலக்க இலங்கை சனநாயக சோசலிச	ரூ.25,000 க்கு மேலான கொடுப்பனவிற்காக ரூ. 25 பெறுமதியான அறவிடப்பட்டிருக்க வேண்டும் எனினும் 72 ஆம் சந்தர்ப்பத்தில் ரூ.7,325,000 பெறுமதியான கொடுப்பனவிற்குரிய முத்திரைக் கட்டணம்

குடியரசின் வர்த்தமானி பத்திரிகை குறைக்கப்பட்டிருக்கவில்லை.

03. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆம் திகதிய பிஈடி.்.12 இலக்கமுடைய அரசாங்க வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 தினங்களுக்குள் கூட்டுத்தாபனத்தினது நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 36 மாத கால தாமதத்திற்குப் பின் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருளாதார அபிவிருத்திக்காக தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பு மதிப்பீட்டிற்கு 09 பிராந்திய தொழில் முயற்சியாண்மைக்கான விருது வழங்கும் விழாக்களையும் தேசிய முயற்சியாண்மைக்கான விருது வழங்கும் விழாவொன்றையும் நடாத்துவதற்காக ரூ. 8,000,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூ.6,020,000 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 05 மாகாணங்களில் மாத்திரமே விருது வழங்கும் விழாக்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் தேசிய முயற்சியாண்மைக்கான விருது வழங்கும் விழா 2019 டிசம்பர் 31 ஆம் திகதிவரை நடாத்தப்படவில்லை.

(இ) 2019 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டமிடலின் பிரகாரம் வியாபார தரவுத் தளமொன்றினை அமைப்பதற்காக ரூ. 1,000,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நுண், சிறு மற்றும் மத்திய தர தொழில் முயற்சியாளர்களினது தகவல்களை உள்ளடக்கிய தரவுத் தளமொன்றினை அமைத்தல் மற்றும் அத்தளத்தினூடாக தொழில் முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன், தளத்தினை அமைப்பதற்கென கணினிகளை கொள்வனவு செய்து பகிர்ந்தளிக்கும் நிகழ்விற்காக ரூ.120,000 செலவு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும், 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வியாபார தரவுத்தளமானது அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஐளுழு தரச்சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூ. 71,762, 2017 ஆம் ஆண்டில் 125,000, 2018 ஆம் ஆண்டில் 35, 880 ஆக மொத்தமாக ரூ. 232,642 செலவு செய்யப்படடிருந்த போதிலும் ஐளுழு தரச்சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இளம் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மீளாய்வாண்டினுள் அமைச்சினால் அதிகாரசபைக்கு ரூ. 1,140,000 வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் எந்த விதமான நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முழெற ர்ழற நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சினால் வழங்கப்பட்ட முற்பண மிகை ரூ. 2,605,147 மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மேலதிக பணத்தினை மீள் நிரப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ. பி. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி